## ஆகஸ்ட் 16

## *புனித ஹங்கேரி முடியப்பர்*

## *(975 – 1038)*



இவருடைய பெற்றோர் சமீபத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களாயினும் இவருக்கு உத்தம கிறிஸ்தவ பயிற்சியளித்தனர். புண்ணியவானான ஓர் ஆயரும் இவருக்குப் பயிற்சி அளித்தார். தந்தை இறந்ததும் அவரது இடத்தில் இவர் ஹங்கேரி நாட்டின் கோமகன் ஆனார். விவேகமுள்ளவரும் புனிதருமான அதிகாரிகளை இவர் எப்பொழுதும் தம் பக்கத்தில் வைத்திருந்தார். அண்டை நாடுகளோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். நாட்டிலிருந்து விக்கிரக ஆராதனையை அகற்ற இவர் முயற்சி செய்தார். மக்கள் பலர் இதை விரும்பவில்லை. எனவே குழப்பம் செய்து, அரசர் இருந்த இடத்தை முற்றுகையிட்டனர் இவர் உபவாசம் இருந்தும், தர்மம் கொடுத்தும், செபித்தும் தம்மைப் போருக்குத் தயாரித்தார். இவரது இராணுவத்தை விட எதிரிகளின் இராணுவம் மிகப் பெரியது. எனினும் தேவ கிருபையால் இவர் வெற்றி பெற்றார். அதன்பின் கிறிஸ்தவ வேதத்தை ஆர்வத்துடன் பரப்பி கோவில்களையும் சந்நியாச மடங்களையும் கட்டி மறைமாவட்டங்களை ஏற்படுத்தினார். பாப்பானவருடைய பிரதிநிதி உரோமையிலிருந்து விலையுயர்ந்த ஒரு கிரீடத்தைக் கொண்டு வந்து இவருக்கு சூட்டினார்.

முடியப்பர், தேவதாய் மீது அதிக பக்தி கொண்டவர். தம் நாட்டை தேவதாய்க்கு அர்ப்பணம் செய்து, பாதுகாப்பில் வைத்தார். இவர் அவசியமின்றி போர் தொடுத்தவர் அல்லர். எப்போதுமே வெற்றியுடன் திரும்பினார். நாடுகளைப் பிடிக்க ஒருபோதும் விரும்பியவரல்ல. அடிக்கடி கடவுளை நினைப்பார். தவ முயற்சிகள் செய்வார். தாழ்ச்சியுடன் இருப்பார் மாதா பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விழா, ஹங்கேரி நாட்டில் அரும்பெரும் அன்னையின் நாள். அந்த விழா அன்று நம் புனிதர் இறந்தார். சாகக் கிடந்த அவர் தம் நாட்டின் பாதுகாவலியான மரியாளை நோக்கி, "ஓ பரலோக அரசியே, வீழ்ந்து கிடக்கும் உலகத்தை மாட்சியுடன் எழுப்பி விடுகிறவளே, திருச்சபையையும், என் குடிகளையும் என் நாட்டையும், பிரிய இருக்கும் என் ஆன்மாவையும் உமது பாதுகாப்பில் வைக்கிறேன்" என்று கூறி உயிர் விட்டார்.

**சிந்தனை:** அன்னையின் ஆரோபண விழா அன்று சுதந்திரம் பெற்ற நம் சாட்டை அவளது பாதுகாப்பில் வைப்போம்.

**செபம்:** அன்னையே, எங்கள் செல்வநாடு உம் மகனுடைய நாடாகக் கிருபை செய்யும்.